ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2096/67 - 2018 නොවැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2018.11.09

*2096/67 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2018, நவெம்பர் மாதம் 05 ஆந் திகதிய 2096/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது, 2018, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தப்படுகின்றதென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மைத்திரிபால சிறிசேன,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2018, நவெம்பர் 09.

1A - G 28920— 377 (2018/11)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் "(இல.2) மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர்" என்ற தலைப்பும் அதன் I ஆம், II ஆம், IIIஆம் நிரல்களின் கீழுள்ள விடயங்களும் பின்வருமாறு:-

***(2) மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர்***

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|---|
| 1. மகாவலி அபிவிருத்தி, காணி மற்றும் சுற்றாடல் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும் | 1. ஸ்ரீ லங்கா மகாவலி அதிகார சபை (வரையறுக்கப்பட்ட மகாவலி லய்வ்ஸ்ரொக் என்ரபிறைசஸ் கம்பனி தவிர்ந்த) | • (1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) ஸ்ரீ லங்கா மகாவலி அதிகாரசபைச் சட்டம் |
| 2. மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தல் | 2. மொரகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்க கருத்திட்டம் | • காடுகள் கட்டளைச் சட்டம் (453ஆம் அத்தியாயமான) |
| 3. மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களும் அதன்கீழ் தாபிக்கப்பட்ட அமைப்புகளுடன் சம்பந்தப்பட்ட அலுவல்களும் | 3. குளங்களின் அணைகளைப் பாதுகாத்தல், நீர்வளங்கள் திட்டமிடல் கருத்திட்டம் | • (1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டம் |
| 4. தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக சுற்றாடலை பாதுகாப்பதற்காக தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | 4. மகாவலி இணைந்த (பீ வலய புனரமைப்பு) கருத்திட்டம் | • (1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க) தேசிய சூழல் சட்டம் |
| 5. வலுவாதார அபிவிருத்திக்காக ஆதரவளித்தல் | 5. உடவளவ இடதுபக்க கரையோரக் கருத்திட்டம் | • (1988 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க) தேசிய மரபுரிமை கானக இடப்பரப்புகள் சட்டம் |
| 6. சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமை பற்றிய கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்தமைத்தல் | 6. உமாஓயா அபிவிருத்திக் கருத் திட்டம் | • (1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க) தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைச் சட்டம் |
| 7. காடுகளும் காட்டியலும் | 7. வனப்பாதுகாப்புத் திணைக்களம் | • (2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) கடல் மாசடைதல் தடுப்புச் சட்டம் |
| 8. காடுகள், வனவிலங்குகள், மாவடை மரவடை ஆகியவற்றின் பாதுகாப்பும் பேணுகையும் | 8. மத்திய சுற்றாடல் அதிகாரசபை | • (1981 ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க) கரையோரப் பாதுகாப்புச் சட்டம் |
| 9. நாட்டின் மரங்களின் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கில் வணிக ரீதியான பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல் | 9. புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம் | • (2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) இலங்கைப் பொறியியலாளர்களின் மன்றச் சட்டம் |
| | 10. வரையறுக்கப்பட்ட (GSMB) தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனி | • (1950 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) காணி கொள்ளல் சட்டம் |
| | 11. அரச மரக் கூட்டுத்தாபனம் | • (1935 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் |
| | 12. தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை | |
| | 13. இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி நிறுவகம் | |
| | 14. லங்கா ரிம்பர் பிளான்ட் அன்ட் இன்டஸ்ரீஸ் | |
| | 15. கரையோர சூழல் பாதுகாப்பு அதிகாரசபை | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(2) மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 10. சுற்றாடல் மாசடைவதைத் தடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் பயனுறுதிவாய்ந்த செயற்படுத்துகையும் | 16. கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் | • (1942 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க) காணி மீட்சி கட்டளைச் சட்டம் |
| 11. கடல் மாசுறல் தடுப்பு வேலைகள் | 17. வலுவாதார அபிவிருத்தி மன்றம் | • (1931 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) காணி நிர்ணய கட்டளைச் சட்டம் |
| 12. கரையோரப் பாதுகாப்பும் பேணுகையும் | 18. பொறியியல் அலுவல்கள் பற்றிய மத்திய ஆலோசனைப் பணியகம் மற்றும் அதன் துணைக் கம்பனி களும் இணைக் கம்பனிகளும் | • (1979 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க) அரச காணி அளிப்புகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் |
| 13. இரத்தினக்கல், ஆபரணக் கைத்தொழிலையும் வர்த்தகத்தையும் ஊக்குவித்தலும் ஒழுங்குறுத்துகையும் | 19. இலங்கை பொறியியலாளர்களின் மன்றம் | • (1947 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) அரச காணிகள் கட்டளைச் சட்டம் |
| 14. சுற்றாடல் மாற்றங்கள் மற்றும் காபன் பயன்பாடு குறைந்த பொருளாதாரமொன்றினைக் கொண்ட நிலைபேறான அபிவிருத்தியொன்றினை ஏற்படுத்துவதற்காகச் சட்டம் மற்றும் உபாய வழிமுறைகளை உருவாக்குதலும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதலும் | 20. காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் | • (1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) காணிச் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டம் |
| 15. அரச காணிகளின் நிருவாகம், முகாமை மற்றும் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடுகை | 21. காணிச் சீர்திருத்த ஆணைக்குழு | • (1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) அரச காணிகள் சட்டம் (உடைமையை மீளப்பெறுதல்) |
| 16. காணி நிர்ணயமும் காணி உரித்துப் பதிவு தொடர்பான பணிகளும் | 22. காணி நிர்ணயத் திணைக்களம் | • (2002ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க) நில அளவைச் சட்டம் |
| 17. நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான காணிகளை தாமதமின்றி சட்டரீதியான முறையில் வழங்குதல் | 23. நிலஅளவையாளர் நாயகம் திணைக்களம் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 18. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள காணிகளை நிர்வகித்தலும் சட்டத்திற்கமைவாக பகிர்ந்தளித்தலும் | 24. நிலஅளவை, நிலவரைபட நிறுவகம் | |
| 19. காணி அளவை, வரைபடமாக்கல், காணித் தகவல்கள் என்பவற்றுடன் தொடர்புபட்ட சேவைகள் | 25. காணி அளவைச் சபை | |
| 20. நிரல் II இல் உள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்ட வேறெல்லா விடயங்களும் | 26. காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் | |
| 21. நிரல் II இல் உள்ள நிறுவனங்களின் கண்காணிப்பு | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

(2) அவ்வறிவித்தலில் "(இல. 9) கமத்தொழில் அமைச்சர்" என்ற தலைப்பும் அதன் I ஆம், II ஆம், III ஆம் நிரல்களின் கீழுள்ள விடயங்களும் பின்வருமாறு:-

***(9) கமத்தொழில் அமைச்சர்***

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. கமத்தொழில் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்
2. உள்நாட்டு உணவுகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்
3. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கமத்தொழில் ரீதியான உற்பத்தியையும் உற்பத்திப் பெருக்கத்தையும் மேம்படுத்தத் தேவையான உபாயவழிகளையும் திட்டங்களையும் வகுத்தமைத்தல்
4. பயிர் பல்வகைப்படுத்துகையின் அடிப்படை யிலான கமத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்
5. பல்வேறு கமத்தொழில் துறைகளில் ஈடுபடுவோருக்கு முறைசார் பயிற்சியளித்தலும் கல்விசார் ஆராய்ச்சி வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கான திறமுறைகளை வகுத்தமைத்தலும்
6. கமத்தொழில் உற்பத்திகளின் பெறுமதிகளை மேம்படுத்துவதற்கான திறமுறைகளை அறிமுகப்படுத்துதல்
7. கமத்தொழிலின் அடிப்படையிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தலும் சந்தை வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும்
8. உள்நாட்டு கமத்தொழில் உற்பத்திகளின் பண்புரீதியான பெறுமதிகளை பாவனையாளர்களான நுகர்வோருக்கு உறுதிப்படுத்துவதற்குரிய திறமுறைகளைத் தயாரித்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

1. கமத்தொழில் திணைக்களம்
2. கமநல அபிவிருத்தித் திணைக்களம்
3. தேசிய உரச் செயலகம்
4. கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள் காப்புறுதிச் சபை
5. உணவு ஆணையாளர் திணைக்களம்
6. தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை
7. பயறு வகை, தானிய ஆராய்ச்சி, உற்பத்தி அதிகாரசபை
8. ஹெக்டர் கொப்பேகடுவ கமத்தொழில் ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்
9. இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான மன்றம்
10. பின் அறுவடைத் தொழில்நுட்பவியல் நிறுவகம்
11. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி
12. கொழும்பு கொமர்ஷல் பசளைக் கம்பனி
13. வரையறுக்கப்பட்ட ஜனதா பர்டிலய்ஸர் என்டபிறய்சஸ்
14. வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் கம்பனி
15. நெல் சந்தைப்படுத்தல் சபை

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்*

- (1972ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க) கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகச் சட்டம்
- (1980ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க) பீடைக் கொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டம்
- (1951 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) மரங்களை வெட்டிச் சாய்த்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டம்
- (1973 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபைச் சட்டம்
- (1999ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) தாவர பாதுகாப்புச் சட்டம்
- (2003ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க) விதைநெல் சட்டம்
- (1996ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க) மண்வளம் பேணல் சட்டம்
- (1987ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க) இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைக்கான பேரவைச் சட்டம்
- (1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க) உரவகைகளை விதிமுறைப்படுத்தற் சட்டம்
- (2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) கமநல அபிவிருத்திச் சட்டம்
- (1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) நெல் சந்தைப்படுத்தல் சட்டம்
- (1978 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(9) கமத்தொழில் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 9. வயல்காணிகள் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் | 16. தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்துகையும், குடியேற்ற அதிகாரசபையும் (ஹதபிம) | • (1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) ஏற்றுமதி கமத்தொழில் அபிவிருத்திச் சட்டம் |
| 10. விவசாய மக்களின் நலன்புரி சேவைகளைத் திட்டமிடுதலும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் | 17. ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 11. பண்புரீதியான தரத்தைக் கொண்ட உரவகைகளை இறக்குமதி செய்தலும் மற்றும் விநியோகத்தின்மூலம் உரமானிய நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறமையுடன் செயற்படுத்துதலும் | 18. வாசனைத்திரவியங்கள் மற்றும் அதனோடிணைந்த உற்பத்தி சந்தைப்படுத்தல் சபை | |
| 12. இலங்கை கமத்தொழில் சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமையும் | | |
| 13. ஐக்கிய நாடுகளின் உணவு, கமத்தொழில் அமைப்பாண்மையுடன் தொடர்புபட்ட பணிகள் | | |
| 14. மரக்கறி அபிவிருத்திச் சபை மற்றும் பழங்கள் அபிவிருத்திச் சபை என்பனவற்றின் சொத்துக்கள் மற்றும் ஏனைய வளங்களுக்குரிய அலுவல்கள் | | |
| 15. சேதனப் பசளை உற்பத்தி மற்றும் நச்சுத் தன்மையற்ற விவசாயத்தைப் பரவலாக்குதல் | | |
| 16. கமத்தொழில் அபிவிருத்தி வலயங்கள், கமத்தொழில் கிராமங்கள் மற்றும் நிலைபேறான வீட்டுத்தோட்டச் செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றைப் பரவலாக்குதல் | | |
| 17. நெல், தானியங்கள் மற்றும் ஏனைய கமத்தொழில் உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப் படுத்துதல், பதனிடுதல் மற்றும் சந்தைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் | | |
| 18. பெறுமதி சேர்த்தல், ஏற்றுமதிச் சந்தைவாய்ப்புக்களை மேம்படுத்துதல், கைத்தொழில் பாதுகாப்புத் தன்மையை ஏற்படுத்தி விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் மற்றும் சிறிய அளவிலான விவசாய முயற்சியாளர்களை உலகளாவிய பொருளாதாரத்தை நோக்கி நகர்த்துவதற்கான கொள்கைகள், உபாயவழிமுறைகளை உருவாக்குதல் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(9) கமத்தொழில் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|---|
| 19. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 20. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

(3) அவ்வறிவித்தலில் "(இல.11) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர்" என்ற தலைப்பும் அதன் I ஆம், II ஆம், III ஆம் நிரல்களின் கீழுள்ள விடயங்களும் பின்வருமாறு:-

***(11) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர்***

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|---|
| 1. கல்வி, உயர்கல்வி, விஞ்ஞான, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் தொடர்பான விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும் | 1. பரீட்சைத் திணைக்களம்<br>2. கல்வி வெளியீட்டுத் திணைக்களம்<br>3. தேசிய கல்வி நிறுவகம்<br>4. இலங்கை நூல் அபிவிருத்திச் சபை<br>5. தேசிய நூலகங்கள் மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபை | • (1960ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க) உதவிபெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் சட்டம்<br>• (1986ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க) கல்லூரிக் கல்வி நிறுவனச் சட்டம்<br>• (1997ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க) தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபைச் சட்டம் |
| 2. முன்சிறுவர் பராய ஆரம்ப, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளுக்கிடையில் சிறந்த தொடர்புகள் ஏற்படும் வகையில் கல்வி அபிவிருத்திக்குரியதான துறைசார் கொள்கைகளைப் பகுப்பாய்வு செய்தலும் வகுத்தமைத்தலும் | 6. கல்விப் பணிப்பாளர் அலுவலகம்<br>7. ஆசிரியர் கல்வி பற்றிய தேசிய அதிகாரசபை<br>8. கல்வியியற் கல்லூரிகள் | • (1985ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க) தேசியக் கல்வி நிறுவகச் சட்டம்<br>• (1968ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க) பகிரங்கப் பரீட்சைகள் சட்டம் |
| 3. உலக போட்டிகர நிலைக்கு தன்னம்பிக்கையுடனும் வெற்றிநிலை பற்றிய நம்பிக்கையுடனும் பிரவேசிக்கக்கூடிய வகையில் தேசிய கல்வி முறையொன்றை உருவாக்குதல் | 9. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள்<br>10. இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு<br>11. பிரிவெனா கல்விச் சபை | • (1993ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க) பாடசாலை அபிவிருத்திச் சபைகள் சட்டம்<br>• (1999ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க) யுனெஸ்கோ புலமைப் பரிசில் நிதியச் சட்டம் |
| 4. தேசிய பாடசாலைகளுக்குத் தேவையான பௌதீக மற்றும் மனித வளங்களைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | 12. அரச அச்சகக் கூட்டுத்தாபனம்<br>13. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(11) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

5. தேசியக் கல்விக் கொள்கைக்கு அமைவாக சர்வதேச பாடசாலைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குறுத்துகையும்

6. முன்பள்ளிகளுக்கான தேசியக் கொள்கைகளை வகுத்தலும் மற்றும் நடைமுறைப்படுத்தலும் ஒழுங்குறுத்துகையும்

7. கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளுக்காகக் கணினி ஆய்வுகூடங்கள் உட்பட நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்துதலை மேம்படுத்துதலும் அபிவிருத்தி செய்தலும்

8. அரச கொள்கைகளுக்கமைவாக பாடப் புத்தகங்கள், சீருடைகள், ஏனைய கற்றல் உபகரணங்கள் மற்றும் வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் நெறிப்படுத்துதல்

9. பாடசாலை நூலக சேவையை ஊக்குவித்தலும் அபிவிருத்தி செய்தலும்

10. கல்வியின் பண்புத்தரம், மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் விழுமியங்களைச் சிறந்தமுறையில் பேணுவதற்குத் தேவைப்படும் கொள்கைரீதியான நடவடிக்கை எடுத்தல்

11. விசேட தேவைப்பாடுகள் உள்ள மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புகளை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்தல்

12. இலங்கை கல்வி நிருவாக சேவை, அதிபர் சேவை மற்றும் ஆசிரியர் சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமைத்துவ அலுவல்களும்

13. பயனுறுதியாகக் கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்நெறியை எய்துவதற்குத் தேவையான ஆசிரியர்களை உருவாக்குதல் மற்றும் அயலளவு அபிவிருத்தி

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

14. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள சகல பல்கலைக்கழகங்களும்

15. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள சகல பட்டப்பின்படிப்பு நிறுவனங்களும் ஏனைய நிறுவனங்களும்

16. புத்த சிராவக்க பிக்குகள் பல்கலைக்கழகம்

17. பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்

18. இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்

19. மகாபொல நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்

20. ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒவ் நெனோ டெக்னொலோஜி பிரைவேட் லிமிட்டெட்

21. தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம்

22. தேசிய விஞ்ஞான மன்றம்

23. தேசிய விஞ்ஞான, தொழில்நுட்பவியல் ஆணைக்குழு

24. கோள்மண்டலக் காட்சிக்கூடம்

25. நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆதர் சி. கிளார்க் நிலையம்

26. ஒத்திசைவு மதிப்பீடு பற்றிய இலங்கை ஏற்றங்கீகார சபை சட்டம்

27. இலங்கை கட்டளைகள் நிறுவகம்

28. இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்*

- (1968 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) அரச அச்சகக் கூட்டுத்தாபனச் சட்டம்
- (1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க) பல்கலைக்கழகச் சட்டம்
- (1996ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க) புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகச் சட்டம்
- (1981ஆம் ஆண்டின் 74ஆம் இலக்க) இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகச் சட்டம்
- (1995 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்விச் சட்டம்
- (1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க) மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் சட்டம்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வியல் அபிவிருத்திச் சட்டம் (1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கம்)
- ஒத்திசைவு மதிப்பீட்டுக்கான இலங்கை ஏற்றங்கீகார சபைச் சட்டம் (2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கம்)
- (1984ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க) இலங்கை நியமங்கள் நிறுவகச் சட்டம்
- (1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க) இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டம்
- இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகச் சட்டம் (1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்கம்)
- (1998 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க) இலங்கைத் தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகச் சட்டம்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(11) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 14. தேசிய மற்றும் இணைந்த மொழிக் கல்வியை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | 29. புத்தாக்குநர் நிதியம் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 15. பாடசாலை அபிவிருத்திச் சபையின் நிருவாகம் | 30. தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் | |
| 16. கல்விசார் நிறுவனங்களை சட்டத்திற்கமைவாக்கல் | 31. தேசிய ஆராய்ச்சி மன்றம் | |
| 17. பௌத்த மற்றும் பாளி கற்கைப் பணிகளை ஊக்குவித்தலும் மத ரீதியான கல்வியின் நோக்கங்கள் பூர்த்தியாகும் வகையில் பிரிவெனா கல்வியை உயர்த்துதலும் | 32. தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் | |
| 18. இலங்கையில் உயர்கல்வியின் பண்புத்தரத்தை முன்னேற்றும் நோக்குடன் சர்வதேச கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்பாண்மைகளுடன் இணைதலும் ஒத்துழைப்பை மேம்படுத்தலும் | 33. பசுமை அபிவிருத்திப் பணியகம் | |
| 19. உயர்கல்விக்குரிய அணுகுமுறைகளை விரிவுபடுத்தலுக்குரிய அளவுகோள்களை அடையாளங்காண்பதும் நடைமுறைப்படுத்துதலும் | 34. விஞ்ஞான, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கச் செயலகம் | |
| 20. தொழில் சந்தைக்குப் பொருத்தமான பட்டதாரிகளை உருவாக்குவதற்கு பல்கலைக்கழக முறைமையை வலுப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைரீதியான திருத்தங்களை மேற்கொள்ளுதலும் அதற்குத் தேவையான மனிதவளங்களைப் பெற்றுக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | | |
| 21. இலங்கை பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் பட்டங்களுக்குச் சர்வதேச மட்ட அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | | |
| 22. இலங்கையில் செயற்படும் தனியார் மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களை ஒழுங்குறுத்துதலும் அங்கீகாரம் வழங்கலும் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(11) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 23. பௌத்த மற்றும் பாளி கல்வியினை மேம்படுத்தலும், பிக்குமார்களின் உயர்கல்வி நடவடிக்கைகளுக்கு அவசியமான வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தலும் | | |
| 24. இளம்சமூகத்தினருக்கு உயர் கல்விக்கான வசதிகளை வழங்குதல் | | |
| 25. சர்வதேச ரீதியில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளின் புதிய கண்டுபிடிப்புகளுக்கு இசைவாகக் கூடியவாறு உள்நாட்டு ஆராய்ச்சிகளுக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் தேவையான வசதிகளை அளித்தல் | | |
| 26. விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூக மற்றும் பொருளாதார ஆராய்ச்சிகளையும் அபிவிருத்திப் பணிகளையும் விரிவுபடுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | | |
| 27. ஆராய்ச்சிகளுக்கும் ஆராய்ச்சி நிறுவகங்களுக்கும் வசதிகளை அளிப்பதன் ஊடாக ஆராய்ச்சிகளைத் திட்டமிடுதலும் மேற்கொள்ளுதலும் | | |
| 28. தகவல், நெனோ மற்றும் உயிரின தொழில்நுட்பவியலும் உள்ளிட்ட புதிய ஆராய்ச்சிகளிலிருந்தும் கண்டுபிடிப்புகளிலிருந்தும் பெற்றுக்கொள்ளும் பெறுபேறுகளையும் அறிவினையும் வியாபார சமூகம் உள்ளிட்ட மற்றைய தரப்புகளுக்குப் பெற்றுக்கொடுக்கத் தேவையான நடவடிக்கை எடுத்தல் | | |
| 29. தரங்களை விதித்தலும் நிர்வாகம் தொடர்பான அலுவல்களும் | | |
| 30. வேறு அமைச்சொன்றின் விடய எல்லைக்குட்படாத ஆராய்ச்சிகள் மற்றும் நிறுவனத்தினால் செயற்படுத்தப்படுகின்ற ஆராய்ச்சிகளுக்காக தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல் | | |

அட்டவணை *(தொடர்ச்சி)*

**(11) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
| 31. புதிய கண்டுபிடிப்புக்களில் மக்களை ஈடுபடுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | | |
| 32. கட்டுமான கைத்தொழிலின் ஊக்குவிப்புக்கும் அபிவிருத்திக்குமான ஆராய்ச்சிகளைச் செயற்படுத்தல் | | |
| 33. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 34. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

(4) அவ்வறிவித்தலில் "(இல.16) திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமைச்சர்" என்ற தலைப்பும் அதன் I ஆம், II ஆம், III ஆம் நிரல்களின் கீழுள்ள விடயங்களும் பின்வருமாறு:-

**(16) திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
| 1. திறன்கள் அபிவிருத்தி, வாழ்க்கைத் தொழில் பயிற்சி, வெகுசன ஊடக மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும் | 1. மூன்றாம் நிலைக் கல்வி, வாழ்க் கைத் தொழிற்கல்வி ஆணைக்குழு | • (1984ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க) இலங்கை அச்சக நிறுவகச் சட்டம் |
| | 2. இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை | • (1990ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க) மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்விச் சட்டம் |
| | 3. தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை | • (1995ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க) இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைச் சட்டம் |
| | 4. வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம் | |
| 2. பாடசாலைக் கல்வியை முடித்தபின் பல்கலைக்கழக கல்விக்காகத் தகைமை பெறாத மாணவர்களிற்கு தொழிற்கல்வி வாய்ப்புகளை விரிவாக்கக்கூடியவாறான கொள்கைகளைத் தயாரித்தலும் வசதிகளை அளித்தலும் | 5. இலங்கை - ஜேர்மன் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவகம் | • (1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகச் சட்டம் |
| | 6. தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்துடன் இணைந்த நிறுவனங்கள் | • (2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க)தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகச் சட்டம் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(16) திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

3. தொழிற்சந்தைக்கு ஏற்ற ஊழியர் படையினை உருவாக்குவதற்காக தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பவியல் கல்வியை நவீனமயப்படுத்துதல்
4. பயிலுநர் பயிற்சி வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
5. தொழில்சார் கல்வியை அணுகுவதற்கான ஆர்வத்தை அதிகரிப்பதற்கான திறமுறைகளை உறுதிப்படுத்துதலும் நடைமுறைப்படுத்துதலும்
6. மக்களது உளப்பாங்குகளை நல்வழியில் மையப்படுத்தி பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளின் முன்னேற்றக் கூறாக வெகுசன ஊடகத்தின் பங்களிப்பிற்குத் தேவையான திறமுறைகளை வகுத்தமைத்தல்
7. மக்களிடையே அறிவு, உளப்பாங்குகள் மற்றும் நல்ரசனை போன்றவற்றை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்
8. சரியான தகவல்களை அறிந்துகொள்ளும் மக்களின் உரிமையை உறுதிப்படுத்தத் தேவையான வழிமுறைகளைக் கையாளுதல்
9. உயர்தரத்திலான ஊடக ஒழுக்கத்தினை ஏற்படுத்தத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்
10. அரசாங்க உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் மற்றும் செய்திகளை வெளியிடுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்
11. இலங்கை பற்றிய தகவல்களை உள்நாட்டு, வெளிநாட்டு ஊடக நிறுவனங்களுக்கு வழங்குதல்
12. வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதராண்மைக் குழுக்களுக்கு அவசியமான தகவல்களையும் விளம்பரச் சேவைகளை யும் வழங்குதல்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

7. தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்
8. இலங்கை அச்சக நிறுவகம்
9. தேசிய கடற்றொழில் மற்றும் கப்பற்றொழில் பொறியியல் நிறுவகம்(கடல்சார் பல்கலைக்கழகம்)
10. தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்
11. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்
12. மனிதவளத்தினை அபிவிருத்தி செய்யும் இலங்கைத் தேசிய மன்றம்
13. தகவல் திணைக்களம்
14. இலங்கை பத்திரிகைப் பேரவை
15. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
16. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
17. சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு
18. வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனி
19. வரையறுக்கப்பட்ட லங்கா பத்திரிகை நிறுவனம்
20. செலசினே தொலைக்காட்சி நிறுவகம்
21. மஹிந்த ராஜபக்ஸ தேசிய ரெலி-சினிமா பூங்கா (ரன்மிஹிதென்ன)
22. தகவல் அறியும் உரிமைகள் தொடர்பான ஆணைக்குழு

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்*

- (2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) இலங்கை கடல்சார் பல்கலைக்கழகச் சட்டம்
- (1997 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) மனிதவளத்தினை அபிவிருத்தி செய்யும் இலங்கைத் தேசிய மன்றச் சட்டம்
- (1973 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம்
- (1839 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) செய்தித்தாள்கள் கட்டளைச் சட்டம்
- (1996 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டம்
- (1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டம்
- (2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) தகவல் அறியும் உரிமைகள் தொடர்பான ஆணைக்குழுச் சட்டம்
- (2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சட்டம்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(16) திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 13. வெளியீடுகளுக்குரிய சர்வதேச ஒப்பந்தங்களையும் சமவாயங்களையும் நடைமுறைப்படுத்துதல் | 23. சகல தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள் | • (2006 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க) இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டம் |
| 14. திணைக்கள வெளியீடுகள் தவிர்ந்த அரசாங்க வெளியீடுகளின் விற்பனை, களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக அலுவல்கள் | 24. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 15. செய்திகள், திரைப்படங்கள், விவரண நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றைத் தயாரித்தலும் காட்சிப்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுத்தலும் | | |
| 16. வாணிப தொலைக்காட்சி, வானொலி ஒலிபரப்புகள் மற்றும் வெளிநாட்டு அலைவரிசைகள் உட்பட வானொலி பிரசாரப் பணிகள் | | |
| 17. அரச துறையில் சேவை வழங்குதலின் உற்பத்திப்பெருக்கம் மற்றும் வினைத்திறமையை உயர்த்துவதற்காகத் தகுந்த தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளைப் பயன்படுத்த உதவியளித்தல் | | |
| 18. கணினி அறிவை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல் | | |
| 19. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதை ஊக்குவிப்பதற்கான திறமுறைகளை வகுத்தமைத்தல் | | |
| 20. IIஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 21. IIஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

(5) அவ்வறிவித்தலில் "(இல.19) தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்" என்ற தலைப்பும் அதன் I ஆம், II ஆம், III ஆம் நிரல்களின் கீழுள்ள விடயங்களும் பின்வருமாறு:-

**(19) தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்**

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்
2. தேசிய மொழிக் கொள்கையைச் செயற்படுத்துதலும் அது தொடர்பான அலுவல்களும்
3. நாட்டினுள் தேசிய ஒருமைப்பாடு மற்றும் மீளிணக்கத்தையும் நீண்டகால சமாதானத்தையும் மேம்படச் செய்தல்
4. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான தேசிய கொள்கையொன்றை வகுத்தமைத்தல்
5. தேசிய ஒருமைப்பாடு தொடர்பாக ஏற்படும் தடைகளை இனங்காணுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரப்பினர்களுடன் மேற்கொள்கின்ற கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தாடல்களை அடிப்படையாகக் கொண்டு கொள்கைரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
6. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக பணியாற்றும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடன் ஒத்துழைத்து செயலாற்றுதலும் அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் இடையில் பிரச்சினைகள் இருப்பின் அவற்றை நிவர்த்தி செய்தலும்
7. தேசிய ஒருமைப்பாடு மற்றும் மீளிணக்கம் பற்றி தற்போது நடைமுறைப்படுத்தப்படும் மற்றும் உரிய காலத்தில் நடைமுறைப் படுத்தக்கூடியதுமான பல்வேறு உபாய முறைகளை மீளாய்வு செய்தலும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தலையிடுதலும்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

1. அரசகரும மொழிகள் திணைக்களம்
2. அரசகரும மொழிகள் ஆணைக்குழு
3. மொழிக் கல்வி மற்றும் பயிற்சி பற்றிய தேசிய நிறுவகம்
4. அரசசார்பற்ற அமைப்புகளுக்கான செயலகம்
5. தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் (அமைச்சின் பணியை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாகும்)
6. காணாமல் போனோர் பற்றிய அலுவலகம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்*

- (1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) அரசகரும மொழிகள் சட்டம்
- (1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டம்
- (2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவகச் சட்டம்
- (1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) தொண்டர் சமூகசேவை அமைப்புக்கள் (பதிவு மற்றும் மேற்பார்வை சட்டம்)
- (2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) காணாமல் போனோர் பற்றிய அலுவலக (தாபித்தல், நிருவாகம் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல் ) சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் நிரலில் குறித்துரைக்கப் பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(19) தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 8. களமட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை மேற்பார்வை மற்றும் மதிப்பீடு செய்தல் | | |
| 9. மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்குத் தேவைப்படின் நிதியங்களை உரிய வழிமுறைகள் மூலம் திரட்டிக்கொள்ளுதல். | | |
| 10. இனங்களுக்கிடையில் ஒருமைப்பாடு மற்றும் சகவாழ்வை மீள்உருவாக்குவதற்கான கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துதல் | | |
| 11. பிரதான தேசிய மொழிகள் மற்றும் இணைமொழியைப் பயன்படுத்தி இனங்களுக்கிடையில் கலாசார, சமூக மற்றும் சமயரீதியான பின்னணியினைப் புரிந்துகொள்வதற்கான வசதிகளை வழங்குதல் | | |
| 12. இலங்கையின் தனித்துவத்தினை மேம்படுத்துவதற்காக தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வினை மேம்படுத்தும் நோக்கிலான கொள்கையைத் தயாரித்தல் | | |
| 13. நீடுறுதியான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்காகத் தேசிய ஒற்றுமை, சகவாழ்வுக்கு தேவைப்படும் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் அரச அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் | | |
| 14. சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளின்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பில் அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் | | |
| 15. அவ்வாறான பிரச்சினைகளுக்குப் பொருத்தமான தீர்வுகளைத் தேடுவதற்கு முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும்போது அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(19) தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| *16.* சகலரும் பங்கேற்கும்வகையில் ஒற்றுமையுடனான சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதற்கும் சகவாழ்வினை மேம்படுத்தும்பொருட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை ஏற்பாடு செய்தல் | | |
| *17.* களமட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் உரிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தலும் மதிப்பிடலும் | | |
| *18.* பல்வேறு சமூகங்களுக்குள்ளும் மற்றும் இடையிலும் ஏற்படக்கூடிய கருத்து முரண்பாடுகள் மற்றும் மோதல்களுக்கான அடிப்படைக் காரணங்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசுக்கு முன்மொழிதல் மற்றும் அவற்றினை நடைமுறைப்படுத்துதல், தொடராய்வு செய்தல் | | |
| *19.* சமூகத்துக்குள்ளும் மற்றும் இடையிலும் மோதல் நிலைமை ஏற்படும் சந்தர்ப்பங்களை இனங்காணுதல் மற்றும் அவ்வாறான சந்தர்ப்பங்களை இணக்கப்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளை ஏற்படுத்துதல் மற்றும் சிபார்சுகளைச் சமர்ப்பித்தல் | | |
| *20.* தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வுக்கான அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் கருத்துக்கள் மற்றும் பங்குபற்றுதல்களைப் பெற்றுக்கொள்ளும்முகமாக அரச, வர்த்தக சமூகம் மற்றும் அரசசார்பற்ற துறையினருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல் | | |
| *21.* கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்மொழிவுகளைச் செயற்படுத்துதல் தொடர்பான பணிகளில் தேவைப்படும்போது தலையிடுதல் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(19) தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| *22.* நிதிரீதியான உதவிகள் மற்றும் விசேட நிபுணத்துவங்களைப் பெற்றுக் கொள்ளும் முகமாக சர்வதேச சமூகத்துடன் தொடர்பு களைக் கட்டியெழுப்புதல் | | |
| *23.* பொருத்தமான முறைகளைப் பின்பற்றி தேவைப்படின் மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்காக நிதியங்களைப் பெற்றுக்கொள்ளல் | | |
| *24. 2016* ஆம் ஆண்டின் *14* ஆம் இலக்க காணாமல்போனோர் பற்றிய அலுவலகச் (தாபித்தல், நிருவாகம், மற்றும் பணிகளை மேற்கொள்ளுதல்) சட்டத்துக்குரித்தான சகல விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | | |
| *25.* IIஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| *26.* II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.